## முழுமையான கண் பரிசோதனையின் போது என்ன நடை பெறுகிறது?

வைத்தியர் கீழ் உள்ளவற்றை உங்கள் பிள்ளையிடம் சோதிப்பார்:



- கண்ணின் சுகாதாரம்
- தூரப்பார்வையும், கிட் டடிப் பார்வையும்
- பார்வைச் செறிவு
- குவிமைத் திறன்
- கண் ஒழுங்கு
- நிறம் பார்க்கும் திறன்

---

## பார்வை பற்றி அறியக் கூடிய செயல் திட்டங்கள் பாடசாலைகளில் உள்ளனவா?

இல்லை. இதனாலேயே கிரமமாக பிள்ளைகளைக் கண் பரிசோதனைக்குப் பெற்றார் எடுத்துச் செல்லுதல் முக்கியமானது.

---

## எனது பிள்ளைக்குப் பார்வைப் பிரச்சினை உண்டு ஆனால் அவர் கண்ணாடி போட விரும்பார். நான் என்ன செய்யலாம்?



வகுப்பிலேயும் வீட்டிலேயும் பிள்ளை கண்ணாடி அணிவதை ஊக்கப் படுத்துதற்கு வகுப்பு ஆசிரியரும் நீங்களும் இணைந்து எவ்விதம் செயற்படலாம் என்பது பற்றி அவருடன் கதையுங்கள். வயது வந்த பிள்ளைகள் திருத்த வில்லைகள் அணியலாம்

உங்களுக்கு கிட்டே உள்ள பார்வைத் தேர்வாளர் ஒருவரைக்காண 416 256 4411 னை அழையுங்கள் அல்லது www.eyecareoao.com. ல் பாருங்கள்.

## பார்வைப் பிரச்சனைகளுக்குரிய அறிகுறிகள்

பார்வையுடன் தொடர்புள்ள பல பிரச்சனைகளை முழுமையான கண் பரிசோதனை மூலம் தான் கண்டு கொள்ள முடியும கீழ்ே சில பொதுவான அறிகுறிகள் உள்ளன உங்கள் பிள்ளை:.

- ✔ தொலைக் காட்சிக்கு மிக அருகே உட்கார்வார்
- ✔ தூரத்தில் உள்ள அடையாளங்களை வாசிப்பதற்குக் க'டப் படுவார்
- ✔ தலையை ஒரு பக்கமாகச்சாய்த்தோ ஒரு பக்கமாகவோ பார்ப்பார்
- ✔ கண்களை அடிக்கடி கசுக்குவார்
- ✔ பொருட்களுடன் அடிக்கடி மோதிக் கொள்வார்
- ✔ தலையிடி,தலைச்சற்று, வாந்தி எடுப்பார்
- ✔ கிட்டடி வேலைகளைத் தவிர்ப்பார்
- ✔ வாசிக்கும் பொழுது அடிக்கடி தனது இடத்தை மறப்பார்

இச்சிற்றேட்டினை அராபிய,சீன,.·.பார்சி, கோறிய,போர்த்துக்கீசிய,பஞ்சாபி,ரு' ய சோமாலி,ஸ்பானி' , தமிழ், உருது, வியற்நாமிய மொழிகளிலே www.tdsb.on.ca எனும் வலைமனையில் காணமுடியும்

# நல்ல கண் பார்வை உங்கள் பிள்ளையைப் பாடசாலையில் சிறப்பாகச் செயற்பட உதவும்



## உங்கள் பிள்ளையின் பார்வை சோதிக்கப் பட்டுள்ளதா?

பிள்ளை கற்பதற்கு நல்ல பார்வை மிக முக்கியமானது. நல்ல பார்வை இருந்தால் தான் பிள்ளைகள் கரும் பலகையைப் பார்க்கலாம் புத்தகம் வாசிக்கலாம் வகுப்பு நிகழ்ச்சி- களில் பங்கு கொள்ளலாம்.

பார்வைப் பிரச்சினைகள் பிள்ளைகள் கற்பதற்கு இடையூறாக அமையும். கிரமமாக பார்வையை பரிசோதனை செய்வது அவர்களைக் கல்வி கற்பதற்குத் தயார் நிலையில் வைப்பதின் ஒரு கூறு எனலாம். உங்கள் பிள்ளையின் கண் பார்வை பரிசோதனை செய்யப் பட்டதா?

---

## பார்வைப் பிரச்சினைகள் பெரும் அளவில் சாதாரணமனவையா?



பார்வைப்பிரச்சனைகள் பரவலாக உள்ளன. ஆறு பிள்ளைகளில் ஒருவருக்கு உள்ளது. ஒரு முறையேனும் பார்வைப் பரிசோதனை செய்யாதோர் பலர் உள்ளனர்.

---

## பார்வைப் பிரச்சினைகள் கற்றலைப் பாதிக்குமா?

ஆம்.பிள்ளைகள் கற்றுள்ளதில் எண்பது விகிதம் (80%) கண்கள் மூலமாகக் கற்றதே. பார்வைக் குறைபாடு உள்ள பிள்ளைகள் தமது வேலையில் மனதை லயிக்க வைக்கக் க‛டப் படுவார்கள்.



அவர்கள் விரக்தியடைந்து தாம் மற்றவர்க-ளிலும் ஆற்றல் குறைந்தவர்கள் என எண்ணுவர். கண்டு பிடிக்கப் படாதபார்வைப் பிரச்சினைகளும் வேறு காரணிகளும் தேர்ச்சி அறிக்கையிலே குறைந்த புள்ளிகள் பெறுவதற்குக் காரணமாக அமையலாம். பாடசாலையிலே கல்வி கற்பதில் க‛டப் படும் எப் பிள்ளையாயினும் பார்வைப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

.

## பிள்ளைகள் எப்போ முதல் முறை பார்வைப் பரிசோதனை செய்யவேண்டும்?



பிள்ளைகள் மூன்று வயதை அடையு முன்னரே முழுமையான கண் பரிசோதனை ஒன்றினை பார்வைத் தோர்வாளர் ஒருவரைக் கொண்டு செய்தல் வேண்டும். பின்னர் பார்வைத் தேர்வாளரின் ஆலோசனைப் படி ஒன்று அல்லது இரண்டு வருடத்துக்கு ஒரு முறை செய்ய வேண்டும்.

---

## தனக்குப் பார்வைப் பிரச்சனை உள்ளது எனப் பிள்ளை உணர்ந்து என்னிடம் கூற முடியுமா?

சொல்ல முடியாது போகலாம்.பிள்ளைகளுக்கு அவர்கள் பார்வையில் பிரச்சனை உள்ளமை பொதுவாகத் தெரிவதில்லை. ஏனையோரும் தாம் பார்ப்பது போன்றே பார்க்கிறார்கள் என்றே அவர்கள் எண்ணுவார்கள்.



---

## எனது பிள்ளை பாடசாலையில் சிறப்பாக செயற்படுகிறார்.அவரையும் கிரமமாக பார்வைப் பரிசோதனை செய்ய வேண்டுமா ?

ஆம். பல பிள்ளைகள் கூடுதலான கடின



உழைப்பினால் பார்வைக் குறைபாடு- களை ஈடு செய்து விடுகின்றனர் உங்கள் பிள்ளையினுடைய பார்வைக் குறைபாடு நிவர்த்தி செய்யப் படுமானால் அவர் இன்னும் சிறப்பாகச் செயற் படுவார்.

## என் பிள்ளையின் கண்ணினை யார் பரிசோதிக்கலாம்?

உங்கள் பிள்ளையின் கண்ணினைச் சோதித்து அவர் நன்கு பார்க்கிறாரா என தீர்மானிப்பதற்குரிய பயிற்சியையும் உபகரணத்தையும் பார்வைத்தீர்வாளரும் கண் மருத்துவரும் பெற்று



ள்ளனர். சில குடும்ப வைத்தியரும் குழந்தை வைத்தியர்களும் ஓரளவு சோதிப்பது உண்டு. கண்ணில் தொற்று நோய் அல்லது வேறு மருத்துவப் பிரச்சனைகள் ஏற்படின் பார்வைத் தேர்வாளர் கண்மருத்துவர் குடும்ப வைத்தியர் குழந்தை வைத்தியர் போன்றோரால் உதவ முடியும்.

---

## பாாவைப் பரிசோதனைக்கு OHIP பணம் தருமா?



ஆம். குழந்தைகளின் பார்வையை வருடா வருடம் சோதிப்பதற்கான செலவினை OHIP ஏற்கும். பார்வைத் தேர்வாளரிடம் செல்கையில் குழந்தையின் உடநல அட்டையை எடுத்துச் செல்லுங்கள்.

---

## கண்ணாடிச்குரிய சேலவினை OHIP ஏற்குமா?



,இல்லை. கண்ணாடியை நீங்கள் உங்கள் பார்வைத் தேர்வாளரிடம் விலைக்கு வாங்கலாம் அல்லது நோய்ப்பட்டியை கண்ணாடி விற்கும் கடையில் காட்டி ஒன்றினை விலைக்கு வாங்கலாம் .